**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS. No.164/2023**

**24.06.2025**

**P.W.2- சேகரன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதி அழைத்ததால் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் தவமணி மகன் செல்வம் என டைப் செய்யப்பட்டு சிவமணி மகன் சேகரன் என பெயரையும், வயதையும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது அப்பா திருமங்கலம் தாலுகா சொரிக்காம்பட்டியில் குடியிருந்தார் என்றால் சரியல்ல. நான் உசிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நிரூபண வாக்குமூலத்தில் நான் திருங்கலம் தாலுகா, சொரிக்காம்பட்டியில் குடியிருந்து வருவதாக பொய்யாக தெரிவித்துள்ளேன் என்றால் அது தவறு. வா.சா.ஆ.18 ஆவணத்தில் எனது தந்தை என்ன மொழியில் கையெழுத்து செய்துள்ளார் என்றால் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்துள்ளார். ஆங்கிலத்தில் எனது தந்தை கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை கையெழுத்தை காண்பிப்பதற்கு வா.சா.ஆ.18யை தவிர வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அப்பா எனக்கு எழுதிக்கொடுத்த பத்திரம் உள்ளது. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.18 ஆவணத்தின் அசல் ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. வாதி எனது கடையில் வேலை செய்ததால் பழக்கம். அவ்வாறு கடையில் வேலை செய்ததால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளும் என் கடையில் வேலை பார்த்தார்கள். நானும், எனது தந்தையும் சொரிக்காம்பட்டியில் குடியிருந்து கொண்டு உசிலம்பட்டியில் குடியிருந்து வருவதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு
என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.